# திருமூலர் கூறும் தனிமனித ஒழுக்கக்கொள்கைகள்

க. சுகன்யா[1], முனைவர் த. சுவாமிநாதன்[2]
[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), [2]உதவிப்பேராசிரியர் & ஆய்வு நெறியாளர்,
[1,2] தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப்பெற்ற அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),
கும்பகோணம் - 612 002.

**ABSTRACT**
The highest of the innate being is the human being, in this special birth, man has to follow the norms that he has to follow. It is man's duty to enhance his life with morality. Our ancestors themselves instructed the principles of individual human morality in their literature. Similarly, Thirumular emphasized the individual human morality to protect the welfare for sake. He has clear moral principles in the scriptures that the man can attain salvation bliss if he lives like this. In the Thirumanthiram, he has instructed the virtue which can greatly help the human race to flourish and grow. This article explains the individual moral principles, of non-killing, not drinking palm-wine, denialism, and orality that are felt for the well-being of the people.

**KEYWORDS:** Thirumoolar, Thirumanthiram, Non killing, individual moral principles, well being of people

**ஆய்வுச்சுருக்கம்**
பிறவிகளிலேயே உயர்ந்த பிறவி மானுடப்பிறவி ஆகும். இத்தகு சிறப்பு வாய்ந்த பிறவியல் மனிதன் ஆற்றவேண்டிய நெறிகளை முறையாக பின்பற்றவேண்டும். அறநெறியுடன் தனது வாழ்வை மேன்மைப்படுத்துவது மனிதனின் கடனாகும். நமது முன்னோர்கள் தங்கள் இலக்கியங்களில் தனிமனித ஒழுக்கக்கொள்கையை அறிவுறுத்தியுள்ளனர். அவ்வகையில் திருமூலரும் திருமந்திரத்தில் தனிமனித அறத்தை வலியுறுத்தி சமூக நலனை காக்க மிகவும் சிறப்பான ஒழுக்க நெறிகளை வகுத்து கூறியுள்ளார். மனிதன் இவ்வாறெல்லாம் வாழ்ந்தால் முக்தி பேரின்பம் பெற முடியும் என்பதை திருமந்திரத்தில் தெளிவான ஒழுக்கக் கொள்கைகளை குறிப்பிட்டுள்ளார். மனித குலம் தழைத்து வளர பெரிதும் உதவக்கூடிய அறத்தை திருமந்திரத்தில் அறிவுறுத்தியுள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையானது திருமந்திரத்தில் திருமூலர் நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு உணர்த்திய கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை வாய்மை ஆகிய தனிமனித ஒழுக்கக் கொள்கைகளை விளக்குகிறது.

## முன்னுரை

சைவ சமயத்தின் முழு முதல்வனாக திகழ்பவர் சிவபெருமான் ஆவார். இவர் மீது அருளிச்செய்யப்பட்டன திருமுறைகள் எனப்படும். இவை பன்னிரெண்டு எனும் தொகுப்பில் அடங்குவன இவற்றுள் பத்தாம் திருமுறையாகத் திருமந்திரத்தை திருமூலர் படைத்தருளியுள்ளார். திருமூலர் சைவ சமயத்தின் கொள்கைகளை பகரும் நூலாக திருமந்திரத்தை படைத்திருப்பது போற்றுதற்குரியதாகும். திருமூலர் நாட்டு மக்களுக்கு பயன்படக்கூடிய வாழ்க்கை முறையினை சைவ சமய நெறியோடு மந்திரப்பாடல்களை யாத்துள்ளார். இக்கட்டுரையின் மூலமாக திருமூலர் கூறும் தனிமனித ஒழுக்கக்கொள்கைகள் பற்றி விரிவாக காண்போம்.

## தனிமனித ஒழுக்கக்கொள்கைகள்

ஒழுக்கமே மனிதனை உயர்த்தும் என்றால் அது மிகையாகாது. வாழ்வில் வெற்றி பெற ஒழுக்கக் கொள்கையின் சிறப்பினை முதற்கண் அறியவேண்டும். ஒழுக்கமே உலக வாழ்வை செம்மையுற தழைக்க வைக்கும் ஆற்றல் கொண்டவையாகும்.ஒவ்வொரு

தனிமனிதனும் தங்கள் வாழ்க்கையில் நிலையான இன்பம்பெற அற ஒழுக்கக்கொள்கையை பின்பற்றவேண்டும். நமது சான்றோர் பெருமக்கள் தாங்கள் இலக்கியங்களில் தனிமனித ஒழுக்கக்
கொள்கையை அறிவுறுத்தியுள்ளனர். திருமூலரும் திருமந்திரத்தில் பல இடங்களில் தனிமனித ஒழுக்கக் கொள்கைகளைப் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

மனிதனின் வாழ்வு சிறக்க அறத்தின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். எனவே தான் திருமூலர் மக்கள் பின்பற்றவேண்டிய ஒழுக்க கொள்கைகளை யாவரும் போற்றும் வண்ணம் திருமந்திரத்தில் எடுத்துரைத்துள்ளார். மனித சமுதாயம் நலம்பெற உதவும் வகையில் தனிமனித ஒழுக்கக் கொள்கைகளாகக் கொல்லாமை புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, வாய்மை, வெகுளாமை, கூடா ஒழுக்கம், பெரியாரைத்துணை கோடல் போன்றவற்றை திருமூலர் மந்திரப்பாடலில் பொதித்துப் பாடியுள்ளார். தனிமனித ஒழுக்கம் மேன்மையடைவதற்கு ஏதுவான மந்திரப்பாடல்களை யாத்த பெருமை திருமூலரைச் சாரும்.

**கொல்லாமை**

உலகில் பிறந்த உயிர்கள் அனைத்துமே வாழவே விரும்புகின்றன. எனவே உயிர்களைக் கொல்வது மிகப்பெரிய குற்றம் ஆகும். ஆறறிவுடைய மனிதன் தன் உயிரை வளர்க்கப் பிற உயிரினைக் கொல்கிறான். அறநூல்கள் இதனை ஏற்பதில்லை.

தனிமனித ஒழுக்கக் கொள்கையை வகுத்த திருமூலர் நாட்டு மக்களுக்கு கொல்லாமை குறித்து அவரது கொள்கையை திருமந்திரத்தில் திறம்பட எடுத்துரைத்துள்ளார். மனிதனாக பிறந்த யாவரும் பிறர் உயிர்களை கொல்லுதல் கூடாது. தன் உயிருக்காக பிற உயிரை கொல்லுபவன் நரகத்தில் வீழ்ந்து அழிவான் என்பதை,

**"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லடிக் காரர் வரிக்கயிற்றாற் கட்டிச்**
**சொல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை**
**நல்லிடும் என்று நிறுத்துவர் தாமே"**[1]

எனும் மந்திரத்தில் அறிவுறுத்தியுள்ளார். தாயுமானவரும்,

**"கொல்லா விரதம் குவலியம் எல்லாம் ஓங்க**
**எல்லார்க்கும் சொல்லுவது என்கிச்சை பராபரமே''**[2]

எனும் கண்ணியில் எல்லா விரதங்களிலும் கொல்லா விரதம் மிகச் சிறந்த விரதம் என்றும் அது உலகம் முழுவதும் பரவி ஓங்கவேண்டும் என்று விரும்பியுள்ளார்.

**வள்ளலாரும்,**

**“எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே**
**எண்ணிநல் இன்புறச் செயவும்''**[3]

எனும் பாடல் அடிகளில் உயிர் வகைகள் யாவையும் தனது உயிர்போல் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு நற்பல கொள்கைகளை பின்பற்றி வாழ்வது சாலச்சிறந்தது. மனித குலம் தழைத்து ஓங்க யாவரும் கொல்லாமை கொள்கையைப் பின்பற்றினால் வாழ்வில் நிலையான இன்பத்தை அடையலாம் கொல்லாமை கொள்கையைக்கொண்டு மனிதன் தனது வாழ்க்கையை மாற்றி கொள்ள இயலும்.

எனவே திருமூலர் காட்டும் கொல்லாமை கொள்கையைப் பின்பற்றி உயர்வடைவதுடன், பிற பிற உயர்களை காத்தருள முடியும்.

**புலால் மறுத்தல்**

புலால் உண்ணுதல் என்பது மிகப்பெரிய குற்றமாகும். பிற உயிரைக்கொன்று தன் ஊனினைப் பெருக்குது மிகவும் இழிவான செயல் ஆகும். மக்களை நெறிப்படுத்தக்கூடிய அனைத்து அற இலக்கியங்களும் புலால் உண்ணாமை அறத்தைப் போற்றுகின்றன. புலால் உண்பது மிகப்பெரிய தீய செயலாகும். திருமூலரும் திருமந்திரத்தில், புலால் மறுத்தல் எனும் தலைப்பில் புலால் உண்ணாமை சிறப்பை குறிப்பிட்டுளார். பிற உயிர்களின் உடல்களைக்கொன்று அவற்றை உண்ணும் இழிவை நாட்டு மக்களுக்கு உணர்த்தும் வண்ணம் மந்திரங்களை திருமூலர் திறம்பட எடுத்தோதியுள்ளார்.

**புலால் உண்டால் அடையும் இழிநிலை**

மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்றால் பிற உயிர்களை தன் உயிர்போல் எண்ணவேண்டும். பிற உயிர்களை தன் உயிர் போல் எண்ணவேண்டும். பிற உயிர்களை கொன்று தன் உடல் வசியை தீர்க்கக்கூடாது. இத்தகு இழிவான செயலை செய்வது மிகப்பெரிய பாவம் ஆகும். எனவேதான் சான்றோர் பெருமக்கள் புலால் உண்ணாமை கொள்கையை தங்கள் படைப்புகளில் எடுத்தோதியுள்ளனர்.

மனிதகுலம் தழைக்க எண்ணிய திருமூலர் புலால் உண்டவர் அடையும் இழிநிலை குறித்து புலால் மறுத்தல் தலைப்பில் விரிவாக குறிப்பிட்டுள்ளார். தனிமனித

ஒழுக்கம் சிறுக்க புலால் உண்ணக்கூடாது. ஒரு உயிரை கொள்வது மானுடத்தர்மம் அல்ல. திருமூலர் புலால் உண்பவர் அடையும் பேற்றைப் பற்றி,

> **“பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
> **எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்**
> **செல்லாகப் பற்றித்தீவாய் நகரத்தின்**
> **மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே"[4]**

எனும் மந்திரத்தில் புண்ணென்று இழிவாகப் பேசப்படும் மற்றொரு உயிரின் உடலான புலாலை உணவாக உண்ணும் இழிவானவரை, இயமனின் தூதர்கள் வர்து பலரும் காணும்படி, கறையான்களைப் போல இறுகப் பற்றி இழுத்துக்கொண்டு சென்று தீப்பொருந்தி நகரத்தின் முதுகைக்கீழ்ப்படகத்தில் கிடத்தி வைப்பர் என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

**புலால் உண்ணாதவர் அடையும் நற்பேறு**

புலால் உண்ணாமல் இறைவனின் திருவடியை அடைந்தவர்களுக்கு கொலை, களவு, கள், காமம், பொய்பேசல் ஆகிய ஐம்பெரும் பாவங்களும் அவற்றால் வரும் துன்பங்களும் இருக்காது என்பதை,

> **“கொலையே களவுகள் காமம் பொய்கூறல்**
> **மலைவான பாதக மாம் அவை நீக்கித்**
> **தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்**
> **கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே’’[5]**

எனும் மந்திரத்தில் திருமூலர் புலால் உண்ணாதவர் அடையும் நற்பேற்றைப் பற்றி விவரித்துள்ளார்.

புலால் உண்ணாமல் வாழ்ந்தால் இறைவனின் அருளைப் பெறமுடியும். இறை அருள் இருந்தால் மனிதப்பிறவியின் பயனை அடைவது எளிதாகும். இறைசிந்தனை மனிதனை மனிதனாக வாழ வழிவகுக்கும். பிற பாவங்கள் செய்யாமல் மனிதகுலம் தழைத்து ஓங்க முடியும். புலால் உண்ணாமல் வாழ்வதே நலம் பயக்கும் எனலாம். வள்ளுவரும் புலால் உண்ணாமையினால் பெறும் பயனை,

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைக்கூப்பி**
**எல்லா உயிரும் தொழும்''[6]**

எனும் குறட்பாவில் புலால் உணவு உண்ணாதவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைக்கூப்பி வணங்கும் எனக் கூறியுள்ளார்.

**கள்ளுண்ணாமை**

தனி மனித ஒழுக்கத்தைக் கூறும் திருமூலர் கள்ளுண்ணாமை நெறியைச் சமூக மக்களுக்கு வலியுறுத்தியுள்ளார்கள். கள் உண்போர்ச் சிற்றின்பத்தை நாடி பேரின்பத்தை இழக்கின்றனர். உண்போர் உணர்வும் ஒழுக்கமும் கெட்டு இறைஞான நெறியை அடையமுடியாது. கள் உண்பவர் ஒழுக்கத்தில் இருந்து விலகியவர் என்பதை,

**"முழுநீர்க் கள் உண்போர் முறைமை அகன்றோர்"[7]**

எனும் மந்திர அடியில் கூறியுள்ளார்.

**வள்ளுவரும்,**

**"உண்ணற்க கள்ளை உணில் உண்கசான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்"[8]**

எனும் குறட்பாவில் கள்ளுண்ணாமை நெறியைக் கூறியுள்ளார்.

திருமூலர் கள்ளுண்ணாமையில் இருவேறு நோக்கில் எடுத்துரைத்துள்ளார். சிவானந்த கள்ளை பருகலாம் என்றும் மக்களின் அறிவை அழிக்கும் கள்ளை உண்ணக் கூடாது எனவும் கூறியுள்ளார்.

**"யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்**
**போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி**
**மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று**
**ஆகும் மதத்தால் அறிவழித் தாரே"[9]**

எனும் மந்திரத்தில் கள்ளுண்பவர் அறிவை இழப்பர் எனக் கூறியுள்ளார்.

ஒவ்வொரு தனி மனிதனும் கள் உண்ணாமை கொள்கை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வதே சாலச்சிறந்தது. கள்ளுண்ணாமை நெறியினால் தனிமனித வாழ்வு தழைப்பதுடன் அவனது சமுதாயமும் தழைத்து ஓங்கமுடியும். எனவே கள்ளுண்ணாமை நெறியை கடைப்பிடித்தால் வாழ்வில் எல்லா வளமும் பெற்று வாழலாம்.

**வாய்மை**

ஒவ்வொரு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத உயர் பண்பாக போற்றப்படுவது வாய்மையாகும். வாய்மையை பேசவேண்டும் என்று நமது முன்னோர்களும் சமுதாயத்தில் தனிமனித ஒழுக்கக் கொள்கைகளுள் ஒன்றாக குறிப்பிட்டுள்ளார்கள். வாய்மையின் சிறப்பை நாட்டு மக்களுக்கு அறநூல்களும் சமய நூல்களும் எடுத்துரைத்துள்ளனர். வாய்மையை குறித்த சிறப்பை திருமூலரும்

இறைநெறியோடு நாட்டு மக்கள் வாழ்விற்கு உயரிய கொள்கைகளுள் ஒன்றாக குறிப்பிட்டுள்ளார்.

**வாய்மையின் சிறப்பு**

தனிமனிதன் வாழ்நாள் முழுவதும் வாய்மை எனும் அறக்கொள்கையை பின்பற்றவேண்டும். அதுவே அழியாத புகழ்தேடி தரும் என்பதில் ஐயமில்லை. திருமூலரும் வாய்மை கொள்கையை பின்பற்றுபவர் அடையும் நற்பேற்றை,

**``மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்றன்னைப்**
**பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை**
**உய்கலந்து ஊழித் தலைவனு மாய்நிற்கும்**
**மெய்கலந்து இன்பம் விளைந்திடும் மெய்பார்க்கே''**[10]

எனும் மந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வாய்மை கொள்கையை கடைப்பிடிக்கும் அடியார்களின் மெய்யாகிய உடம்பிலும் உயிரிலும் இறைவன் என்றென்றும் கலந்திருப்பான். பொருட்பாற்றாலும் உயிர் பற்றாலும் பொய் சொல்லி வாழ்வோரின் முன்னே அவ்விறைவனாகிய ஒருவன் போய் நிற்கமாட்டான் என்று திருமூலர் நாட்டு மக்கள் வாய்மையே பின்பற்ற அறிவுறுத்துவதை காணலாம். வள்ளுவரும்,

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்''**[11]

எனும் குறட்பாவில் பிறருக்கு என்முனையைளவு தீமையும் ஏற்படாத ஒரு சொல்லைச் சொல்வது தான் வாய்மை என்பார்.

மனிதன் வாய்மையை வாழ்வில் பின்பற்றினால் இறை அருளை பெற முடியும், பொய்மை என்றும் அழிவை தரும். இதனை மக்கள் உணர்ந்து தங்கள் வாழ்வில் வாய்மை எனும் கொள்கை பின்பற்றுவது சாலச்சிறந்தது.

**முடிவுரை**

இக்கட்டுரையின் மூலமாக மனிதகுலம் தழைத்தோங்க திருமந்திரத்தில் திருமூலர் கூறிய தனிமனித ஒழுக்கக் கொள்கைகள் பற்றி அறிந்துக்கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனும் திருமூலர் காட்டிய கொல்லாமை, புலல் மறுத்தல், கள்ளுண்ணாமை, வாய்மை ஆகிய கொள்கைகளை பின்பற்றினால் வாழ்வில் எல்லா வளத்தையும் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

## சான்றெண் விளக்கம்

1. திருமூலர், திருமந்திரம் பாயிரம் முதல் மூன்று தந்திரங்கள், பா.198
2. தாயுமானவர், ஶ்ரீ தாயுமானவர் சுவாமி பாடல்கள், பராபரக்கண்ணி, 54
3. ஔவை. துரைசாமிப்பிள்ளை, வள்ளலார், பா.3403
4. திருமூலர், மு.நூ.பா.199
5. மேலது., பா.200
6. தா.மா.வெள்ளைவாரணம், திருக்குறள் உரைகொத்து, கு.260
7. திருமூலர், மு.நூ.ப.364:3
8. தா.மா. வெள்ளைவாரணம், மு.நூ.கு.922
9. திருமூலர், மு.நூ.335

10. திருமூலர், திருமந்திரம், (எட்டாம் தந்திரம்) பா.2599
11. தா.மா.வெள்ளைவாரணம், மு.நூ.கு.291

**துணைநூற்பட்டியல்** :

**முதன்மை சான்று** :


**1. திருமூலர் - திருமந்திரம்,**
பாயிரம் முதல் மூன்று தந்திரங்கள்,
திருவாவடுதுறை ஆதீன வெளியீடு,
ஸ்ரீ நமசிவாய மூர்த்தி அச்சகம்,
திருவாவடுதுறை,
பதிப்பு - 2001.

**2. திருமூலர் - திருமந்திரம், (எட்டாம் தந்திரம்)**
திருவாவடுதுறை ஆதீன வெளியீடு,
ஸ்ரீ நமசிவாய மூர்த்தி அச்சகம்,
திருவாவடுதுறை,
பதிப்பு - 1992.


**துணைமை சான்றுகள்** :


**3. தாயுமானவர் - ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல்கள்,**
ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்,
திருப்பராய்த்துறை - 639 115.
பதிப்பு - 1994.

**4. ஔவை.**
**துரைசாமிபிள்ளை(உ.ஆ), - வள்ளலார், எட்டாம் தொகுதி,**
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு,
மாருதி பதிப்பகம்,
சென்னை – 600 014.
பதிப்பு – 1998

**5. வெள்ளைவாரணம்**
**தா.ம (ப.ஆ) - திருக்குறள் உரைக்கொத்து,**
லிப்ரா அச்சகம்,
ஸ்ரீ காசி திருமட வெளியீடு,
திருப்பனந்தாள் - 612 504.
பதிப்பு - 1993.